பக்கங்கள்:-19

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஐப்பசி 19 | ஞாயிற்றுக்கிழமை | 05.11.2023 | அதிர்வு 96

## கால்வாய்க்குள் வீழ்ந்த பெண் குழந்தை மரணம்

### புத்தளத்தில் சோகம்

(ரஸீன் ரஸ்மின்)

புத்தளம் – மதுரங்குளியில் கால்வாய்க்குள் வீழ்ந்த ஒரு வயது பெண் குழந்தை உயிரிழந்துள்ளது.

06

## மன்னாரில் இருந்து படகு மூலம் கடத்திய 2 கிலோ தங்கத்துடன் ஐவர் சிக்கினார்கள்





(ந.லோகதயாளன்)

மன்னாரில் இருந்து படகு மூலம் தமிழகம் நோக்கிக் கடத்திச் செல்லப்பட்ட 2 கிலோ தங்கம் இலங்கைக் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

மன்னாரில் இருந்து 06

# இனவாதிகளைக் கூண்டோடு சிறையில் அடைக்க வேண்டும்

## ரணிலிடம் மைத்திரி இடித்துரைப்பு

– சுடர் திலீபன் –

“தமிழ் - முஸ்லிம் - சிங்கள மக்கள் இடையே இனவாதத்தைக் கக்கி வன்முறையைத் தூண்ட முயற்சிப்பவர்கள் எவராக இருந்தாலும் அவர்கள் அனைவரையும் கைது செய்து சிறையில் அடைக்க வேண்டும். இந்த விடயத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தயக்கம் காட்டக்கூடாது.”

06



## ஆலோசனைகளை நடைமுறைப்படுத்தத் தவறும் அரச அதிகாரிகளுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை

### ஜனாதிபதி ரணில் பகிரங்க எச்சரிக்கை



“நாட்டின் அபிவிருத்திக்காக வழங்கப்படும் ஆலோசனைகளை உரிய வகையில் நடைமுறைப்படுத்தத் தவறும் அரச நிறுவன பிரதானிகளுக்கு எதிராக எதிர்வரும் நாள்களில் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.”

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

மாவட்டஅபிவிருத்திக்குழுகூட்டத்தில் மாவட்டத்தின் அபிவிருத்திக்காக மேற்கொள்ளப்படும் தீர்மானங்களை நடைமுறைப்படுத்தும் பணிகளை, அரசாங்க அதிகாரிகள் துரிதப்படுத்த வேண்டியது அவசியம் என்றும், நாட்டை பின்நோக்கிக் கொண்டுச் செல்லும் வேலைத் திட்டத்துக்கு ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

06

## மின் கட்டணத்தை உடன் குறைக்கவும்

### மொட்டுக் கட்சி வலியுறுத்து



வரவு – செலவுத் திட்டத்துக்கு முன்னர் மின் கட்டணத்தைக் குறைப்பது தொடர்பில் துறைசார் அமைச்சர் தீர்மானமொன்றை எடுக்க வேண்டும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் கருத்து

06



இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கொள்கைத் தீர்மானங்களை முடிவெடுக்கும் அதிகாரம் கொண்ட கட்சியின் மத்திய குழுவின் கூட்டம் இன்று வவுனியாவில் நடைபெறுகின்றது.

அடுத்த தேசிய மாநாட்டுக்கான திகதியைத் தீர்மானிப்பது இன்றைய கூட்டத்தில் முக்கிய நிகழ்ச்சியாக உள்ளது.

யாழ். மாவட்டத்தில் சில கிளைக் குழுக்கள் மற்றும் மாவட்ட குழுவின்

06

# சீனத் தூதரின் வடக்கு விஜயம் உரிய பாதுகாப்புக்கு ஏற்பாடு

(ந.லோகதயாளன்)

சீனாவின் தூதுவரின் வடக்கு பயணத்திற்கான பாதுகாப்பு ஏற்பாட்டை மேற்கொள்ளுமாறு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு பொதுப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு கடிதம் அனுப்பி வைத்துள்ளது.

இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சிங்கொங் இன்றில் இருந்து 8ஆம் திகதி வரையில் வடக்கிற்கான உத்தியோகபூர்வமாக வடக்கிற்கு பயணம் மேற்கொள்வதனால் உரிய பாதுகாப்பு ஏற்பாட்டை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சீனத் தூதரகத்தின் 31ஆம் திகதிய கடித கோரிக்கையின் பெயரில் அனுப்பியுள்ள இக்கடிதத்தில் சீனத் தூதுவர் தமது வடக்கு விஜயத்தின் போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் வடக்கு ஆளுநர் பி.எம்.எஸ். சாள்ஸ் ஆகியோரைச் சந்திக்கின்றமையோடு தீவுகளிற்கும் பயணிக்கவுள்ளார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இக்கடிதத்தின் பிரதி பொலிஸ்மா அதிபர் மற்றும் இராஜதந்திரிகளிற்கான பாதுகாப்பு பிரிவின் பணிப்பாளருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

# தூதர்களாக நியமனம் பெற்ற 10 பேர் குழு வடக்கே வருகை

## கடல் அட்டைப் பண்ணைகளையும் பார்வை



(ந.லோகதயாளன்)

இலங்கை வெளிவிவகார அமைச்சினால் வெளிநாடுகளுக்கு புதிதாக நியமனம் செய்யப்பட்ட தூதுவர்கள் 10 பேர் கொண்ட குழு யாழ்ப்பாணத்தில் இயங்கும் கடல் அட்டைப் பண்ணைகளைப் பார்வையிட்டது.

யாழ்ப்பாணம் மாவட்டத்திற்கு இரு நாள் விஜயம் செய்துள்ள இக்குழாமில் உள்ள இத்தாலிக்கான தூதர் சத்யஜித் றொட்ரிகோ , எகிப்துக்கான தூதர் மதுரிகா வெனிங்கர், பங்காளதேசத்திற்கான உயர் ஸ்தானிகர் தரமபால வீரக்கொடி, சிங்கப்பூருக்கான உயர் ஸ்தானிகர் செனரத் திசாநாயக்க , பெல்ஜியம் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்திற்கான தூதுவர் திருமதி. சந்தன வீரசேன, இந்தியாவுக்கான உயர் ஸ்தானிகர் க்ஷேனுகா செனவிரத்ன, பாகிஸ்தானுக்கான உயர் ஸ்தானிகர் அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன, நேபாளத்திற்கான தூதுவர் எயார் மார்ஷல் சுதர்சன் பத்திரன, கியூபாவுக்கான தூதுவர் அட்மிரல் நிஷாந்த உலுகெதென்ன, பிரித்தானியாவுக்கான உயர்ஸ்தானிகர் ரோஹித போகொல்லாகம ஆகியோர் அடங்கியிருந்தனர்.



இக்குழு, யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்து கடல் அட்டைப் பண்ணைகளைப் பார்வையிட்டதோடு பல சந்திப்புக்களிலும் ஈடுபட்டது.

இதேநேரம் யாழ்ப்பாணம் பொது சன நூலகம், யாழ்ப்பாணம் வணிகர் கழகம் ஆகிய இடங்களுக்கு இக்குழு சென்றதுடன் மதத்தலைவர்கள், சிவில் சமூகத்தினர் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரையும் சந்தித்து கலந்துரையாடியது.

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியால் தூதர்களுக்கான இரண்டு வார வழிகாட்டல் திட்டம் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. வடக்கு மற்றும் தெற்குக்கு விஜயம் செய்து கள நிலைமைகளை அறிந்து கொள்வதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.








CENTRAL PARK JA-ELA

CENTRAL PARK JA-ELA

15 ACRES LARGEST

GATED DEVELOPMENT PROJECT IN SRI LANKA

OVER 40+ AMENITIES



COMFORT ASSURED, SPACIOUS LAYOUTS & PREMIUM FACILITIES

KELSEY HOUSE - 3 BHK HOUSES

KELSEY VILLA - 3/4 BHK HOUSES

FAMILY VILLA - PRIVATE APARTMENTS

HARMONY PARK - HOUSING COMPLEX



24/2, Court Road, Weligampitiya, Ja Ela

Blue Ocean™ GROUP OF COMPANIES

LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA

3500+ UNITS

235+ PROJECTS

20+ CITIES

KELSEY HOMES

40 Years Housing Excellence

Discover the Locations that Embraces the Ultimate Luxurious Living

+94 777 546 546 +94 770 774 774

No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka. www.blueocean.lk www.kelsey.lk


வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை 01 - 30, 2023
"ஒரு தேசமாக நிலைத்திருக்க, ஒரு மாநிலமாக வளர, மக்களாக வாழ எங்களிடம் மரங்கள் இருக்க வேண்டும்."
தியோடர் ரூஸ்வெல்ற் - அமெரிக்காவின் 26ஆவது ஜனாதிபதி
ஆளுக்கொரு மரம் நடுவோம்
நாளுக்கொரு வரம் பெறுவோம்
கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல;
தமிழ்த் தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும்!
தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்


AIRPORT PICKUP & DROP
COLOMBO - JAFFNA
WEDDING SERVICE
DAY RENTING
KDH
VAN FOR RENT
A/C
Make Your Ride Better
CALL NOW
+94 773 776 882
+94 753 770 230

# தெதுரு ஓயா, தப்போவ தேக்கங்களின் வான் கதவுகள் திறந்து விடப்பட்டுள்ளன

## முந்தல், சிலாபம் ஆராச்சிக்கட்டுவ பகுதிகளில் கடும் மழையால் பல கிராமங்கள் வெள்ளத்தில்!




(ரஸீன் ரஸ்மின்)

புத்தளம் மாவட்டத்தில் தெதுரு ஓயா மற்றும் தப்போவ ஆகிய நீர்த்தேக்கங்களின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன எனப் புத்தளம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் கடமை நேர அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்த சில தினங்கள் தொடர்ச்சியாக பெய்த கடும் மழை காரணமாக, தெதுரு ஓயாவின் நீர்மட்டம் உயர்வடைந்தமையால், நேற்று முன்யினம் தெதுரு ஓயாவின் நான்கு வான் கதவுகள் தலா நான்கு அடி உயரத்தில் திறக்கப்பட்டன.





எனினும், நேற்று மாலை முதல் நள்ளிரவு வரை தொடர்ச்சியாக கடும் மழை பெய்தமையால் , தெதுரு ஓயாவின் நீர்மட்டம் வெகுவாக உயர்வடைந்த நிலையில் நேற்று அதிகாலை மேலும் ஒரு வான் கதவு திறக்கப்பட்டுள்ளது.

இதனால் இந்த நீர்த்தேக்கத்திலிருந்து வினாடிக்கு 13 ஆயிரத்து 800 கன அடி நீர் வெளியேற்றப்படுகின்றது.

இதேவேளை, தப்போவ நீர்த்தேக்கத்தின் நான்கு வான் கதவுகள் ஒரு அடி உயரத்தில் திறக்கப்பட்டுள்ளன.

இந்த நீர்த்தேக்கத்தில் இருந்து வினாடிக்கு 8 ஆயிரத்து 800 கன அடி நீர் வெளியேற்றப்படுகிறது.

இவ்வாறு தெதுரு ஓயா மற்றும் தப்போவ ஆகிய நீர்த்தேக்கங்களில் இருந்து நீர் வெளியேற்றப்படுவதால் இந்த இரண்டு நீர்த்தேக்கங்களை அண்டிய பகுதிகளில் வாழும் மக்களுக்கு எவ்வித பாதிப்புக்களும் இல்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

எனினும், தொடர்ச்சியாக கடும் மழை பெய்தால் மக்கள் மிகவும் அவதானத்துடன் இருக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை, நேற்று முன்தினம் முதல் தொடர்ச்சியாக பெய்த கடும் மழை காரணமாக புத்தளம் மாவட்டத்தில் முந்தல், சிலாபம் மற்றும் ஆராச்சிக்கட்டுவ ஆகிய பிரதேச செயலகங்களின் கீழ் உள்ள பல கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

எனினும், மேற்குறிப்பிட்ட பகுதிகளில் தேங்கியுள்ள வெள்ள நீர், உடப்பு மற்றும் முந்துப்பந்திய ஆகிய கடற்பகுதிகளில் "அறுவாய்" வெட்டப்பட்டு வெள்ளநீர் கடலுக்குள் விடப்பட்டது.

முந்தல் மற்றும் ஆராச்சிக்கட்டு பிரதேச செயலாளர்கள் மற்றும் புத்தளம் அனர்த்த முகாமைத்துவ அதிகாரிகளின் உதவியின் கீழ், பெக்கோ இயந்திரம் கொண்டு அறுவாய் தோண்டப்பட்டு கடலுக்குள், வெள்ளநீர் விடப்பட்டது.


இதனால், தற்போது முந்தல், சிலாபம் மற்றும் ஆராச்சிக்கட்டுவ ஆகிய பிரதேச செயலகங்களின் கீழ் உள்ள கிராமங்களில் தேங்கி நிற்கும் வெள்ளநீர் தற்போது வழிந்தோடிக் கொண்டிருப்பதாகவும் புத்தளம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் கடமை நேர அதிகாரி மேலும் தெரிவித்தார்.

மேலும், புத்தளம், பாலாவி, மஹாகும்புக்கடவல உள்ளிட்ட சில கிராமங்களும் வெள்ளத்தினால் மூழ்கிய போதிலும், சில மணித்தியாலங்களில் வெள்ளநீர் வழிந்தோடியதாகவும் கூறப்படுகிறது.

இதேவேளை, இங்கினிமிட்டிய மற்றும் ராஜாங்கன ஆகிய நீர்த்தேக்கங்களிலும் நீர் மட்டம் உயர்வடைந்து காணப்படுகின்ற போதிலும், வான் கதவுகள் எதுவும் திறக்கப்படவில்லை என புத்தளம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் கடமைநேர அதிகாரி கூறினார்.

எனினும், தொடர்ந்தும் மழை பெய்தால் அந்த நீர்த்தேக்கங்களின் வான் கதவுகளும் திறக்க நேரிடும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.



## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கூட்டங்கள் இன்னும் நடத்தி முடிக்கப் படாத சூழ்நிலையில், அவற்றை நடத்த டிசம்பர் மாதம் கால அவகாசம் வழங்கி, ஜனவரியில் தேசிய மாநாட்டுக்குத் திகதி நிர்ணயிக்கப்படக் கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இன்றைய கூட்டத்திற்கு மட்டக்களப்பு பிரதிநிதிகளின் வருகை குறைவாக இருக்கும் என்றும் தெரிகின்றது. மட்டக்களப்பு முன்னாள் எம்.பி. ஸ்ரீநேசனின் தாயாரின் இறுதிக் கிரியைகளில் பங்கு பற்றுவதற்காக அவருக்கு நெருக்கமான பலர் இன்றைய கூட்டத்தைத் தவறவிடக் கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. சுகவீனம் காரணமாக கட்சியின் சிரேஷ்ட துணைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானமும் இன்றைய கூட்டத்தில் பங்குபற்றார் என்று தெரிவிக்கப்பட்டது.

கட்சியின் எதிர்கால போக்குக்கான முன்னோட்டம் இன்றைய கூட்டத்தில் தெரியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

+ + +

சீனத் தூதுவரின் வடக்கு வருகை மீண்டும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இன்று ஐந்தாம் திகதி முதல் எட்டாம் திகதி வரை வடக்கில் அவரது நிகழ்ச்சி நிரல் உள்ளதாகப் பாதுகாப்பு அமைச்சின் தகவல்கள் கூறுகின்றன. ஆனால் இன்று முதல் ஏழாம் திகதி பிற்பகல் மன்னாரில் இடம்பெறும் நிகழ்வுகள் வரை அடங்கிய நிகழ்ச்சி நிரலே அவரின் வடக்கு வருகையை ஒட்டி இதுவரை வெளியாகி உள்ளது. அதில் 8ஆம் திகதிக்கான நிகழ்வுகளின் விவரம் இல்லை.

அன்றைய தினம் இலங்கைக் கடற்படையோடு சேர்ந்து மன்னார் கடலில் சீனத்தூதுவர் பயணிக்கக் கூடும் என்று ஒரு வட்டாரம் தகவல் வெளியிட்டது.

தலைமன்னாருக்கும் இராமேஸ்வரத்திற்கும் இடைப்பட்ட கடற் பகுதியில் - முன்னர் ராமர் பாலம் அமைந்திருந்ததாகக் கருதப்படும் இடத்தில் - இப்போது துரத்தூர சில மணல் திட்டுகள் உள்ளன. மொத்தம் 11 மணல் திட்டுகள் இருக்கின்றன. அவற்றில் ஆறு மணல் திட்டுகள் இலங்கைக் கடற்பிரதேசத்துக்குள்ளும், 5 மணல் திட்டுகள் இந்தியாவின் கடற்பிரதேசத்துக்குள்ளும் உள்ளன. இலங்கையின் கட்டுப்பாட்டுக்குள் உட்பட்ட ஆறு மணல் திட்டுகளில் மூன்றாவது மணல் திட்டு சற்று பெரியது. அதற்கு அடிக்கடி இலங்கைக் கடற்படையினர் போய் வருகின்றனர் எனத் தகவல். அங்கு கடற்படையின் சில கட்டுமானங்கள் இருப்பதாகவும் கூறப்படுகின்றது.

ஏழாம் திகதி இரவு அல்லது எட்டாம் திகதி விடிகாலை இந்த மணல்திட்டுகளில் மூன்றாம் திட்டுக்கும், சில சமயம் அதையும் தாண்டியும் சீனத்தூதுவர் சென்றுவரக் கூடும் என்று மேற்படி வட்டாரம் தகவல் வெளியிட்டது.

மணல் திட்டில் அப்படி என்னதான் உள்ளது என்பது தெரியவில்லை. ஆனால் மன்னார் கடற்படுக்கையில் எண்ணை, எரிபொருள் வளம் உள்ளதா என்ற ஆய்வுகள் தொடர்பில் சீனத் தரப்பும் ஆர்வம் காட்டக் கூடும் என்று அந்த வட்டாரம் மேலும் தெரிவித்தது.

இலங்கை - இந்திய கேபிள் மின்னிணைப்பு, தலைமன்னார் - ராமேஸ்வரம் கப்பல் போக்குவரத்து என்று மன்னாருக்கு முக்கியத்துவம் கொடுத்து இந்தியா காய் நகர்த்திகையில், அதற்குள்ளும் முந்திக் க்கொண்டு மூக்கை நுழைக்க சீனா எத்தனிப்பதாகக் கூறப்படுகிறது. வடக்கை அமைதியாக இருக்க சீன தரப்பு விடுமானால், அதுவே சீனா வடக்குக்கும் வடக்கு மக்களுக்கும் செய்யும் பேருதவியாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

## கால்வாய்க்குள் வீழ்ந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது என்று புத்தளம் பகுதிக்குப் பொறுப்பான திடீர் மரண விசாரணை அதிகாரி பதுர்தீன் முஹம்மது ஹிஸாம் தெரிவித்தார்.

குழந்தையின் வீட்டுக்கு அருகிலுள்ள கால்வாய்க்குள் வீழ்ந்தே குழந்தை உயிரிழந்துள்ளது.

நேற்றுப் பிற்பகல் குழந்தையின் தாய் மற்றும் அம்மம்மா ஆகியோர் வீட்டு வளவைத் துப்புரவு செய்துகொண்டிருந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சந்தர்ப்பத்திலேயே அந்தக் குழந்தை வீட்டுக்கு அருகிலுள்ள கால்வாய்க்குச் சென்றுள்ளது எனக் கூறப்படுகின்றது.

தமது வேலைகளை முடித்துக் கொண்டு வீட்டில் சேகரித்த குப்பைகளைக் கொட்டுவதற்காகக் கால்வாய்க்கு அருகே வந்த போதே குழந்தை நீரில் மிதந்துகொண்டிருப்பதைத் தாய் அவதானித்துள்ளார்.

இதையடுத்து, அயலவர்களின் உதவியுடன் அந்தக் குழந்தை உடனடியாக புத்தளம் தள வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

எனினும், அந்தக் குழந்தை ஏற்கனவே உயிரிழந்து விட்டது என வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

நீரில் மூழ்கியதில் ஏற்பட்ட மூச்சுத் திணறல் காரணமாகக் குழந்தை இறந்துள்ளது என்று பிரேத பரிசோதனை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மதுரங்குளி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## மன்னாரில் இருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பயணித்த படகு ஒன்றைச் சந்தேகத்தின் பேரில் கடற்படையினர் மறித்துச் சோதனை மேற்கொண்டதில் படகில் மறைத்து வைத்திருந்த 2 கிலோ மற்றும் 150 கிராம் எடை கொண்ட தங்கக் கட்டிகளைக் கடற்படையினர் கைப்பற்றினர்.

அத்துடன் படகில் இருந்தவர்கள் மற்றும் இந்தக் கடத்தலுடன் தொடர்புபட்டதாகக் கருதப்படும் ஓட்டோ ஒன்று, மோட்டார் சைக்கிள் ஒன்று என்பவற்றுடன் கடத்தலுடன் தொடர்புபட்ட சந்தேகநபர்கள் ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைப்பற்றப்பட்ட தங்கத்துடன் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் மேலதிக சட்ட நடவடிக்கைக்காகக் காங்கேசன்துறையில் உள்ள சுங்கத் திணைக்களத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்று கடற்படை தெரிவித்துள்ளது.

## ஆலோசனைகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நுவரெலியா மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்திலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

மாவட்ட அரசியல் குழுவினர் மற்றும் அரச அதிகாரிகள் இந்தக் கூட்டத்துக்கு அழைக்கப்பட்டிருந்ததோடு, மாவட்டத்தின் அபிவிருத்திக்காகத் தற்போது வரை முன்னெடுக்கப்பட்டிருக்கும் வேலைத் திட்டங்கள் மற்றும் எதிர்கால அபிவிருத்திக்கான திட்டங்கள் தொடர்பிலும் ஆராயப்பட்டது.

அதேபோல் 2022 டிசம்பர் 22 மற்றும் 2023 ஏப்ரல் 10 ஆகிய திகதிகளில் ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற கூட்டங்களில் எடுக்கப்பட்டத் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதில் உள்ள முன்னேற்றம் தொடர்பிலும் இதன்போது ஆராயப்பட்டது.

மாவட்ட வைத்தியசாலைகளில் மருந்து தட்டுப்பாட்டைக் குறைத்தல், பாடசாலை ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்தல், வீதி புனரமைப்பு, குடிநீர் பிரச்சினைக்குத் தீர்வு உள்ளிட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி வசதிகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட உடனடித் தீர்மானங்கள் மற்றும் அவற்றின் முன்னேற்றங்கள் தொடர்பிலும் ஆராயப்பட்டது.

அதனையடுத்து வேலைத்திட்டங்களை செயற்படுத்துவதில் காணப்படும் பிரச்சினைகள், ஜனாதிபதியின் நேரடி கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டு நிவர்த்தி செய்யப்பட்டன.

நுவரெலியாவை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் கண்கவர் பகுதியாக மாற்றியமைக்கும் வேலைத்திட்டங்களைத் துரிதப்படுத்துவதன் மூலம், இது நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு பெரும் பங்களிப்பாக இருக்கும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டினார்.

சுற்றுலாத்துறை முதலீடுகளை ஈர்க்க, அரசாங்க அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டிருக்கும் அறிவுறுத்தல்களுக்கமைய அவர்களின் பொறுப்புக்களைத் துரிதமாக நிறைவேற்ற வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

அரச நிறுவன பிரதானிகள் தமது நிறுவனங்கள் தொடர்பில் சரியான தெரிவைக் கொண்டிருக்க வேண்டும் என்றும், அவ்வாறு இல்லாத பட்சத்தில் அரச நிறுவனங்களிடத்திலிருந்து மக்களுக்கான சேவை கிடைக்காது என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

நுவரெலியா அபிவிருத்தித் திட்டம் தொடர்பில் இங்கு விரிவாக ஆராயப்பட்டது.

நுவரெலியா மாவட்ட செயலாளர் அலுவலக கட்டடத்தின் கீழ் பகுதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டிருக்கும் ஆடை விற்பனை நிலையமொன்றையும் ஜனாதிபதி திறந்துவைத்தார்.

## மின் கட்டணத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வெளியிட்ட அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன கூறியவை வருமாறு:-

“மின் கட்டணம் அதிகரிப்பை ஏற்க முடியாது. அது குறைக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே நாம் இருக்கின்றோம். இது தொடர்பில் வரவு - செலவுத் திட்டத்துக்கு முன்னர் அமைச்சர் காஞ்சன விஜேசேகர தீர்மானமொன்றை எடுக்க வேண்டும்.

போராட்டத்துக்குப் பின்னர் சவாலான காலகட்டத்திலேயே அவர் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சுப் பதவியை ஏற்றிருந்தார். சிறப்பாகவும் செயற்பட்டு வருகின்றார். எனவே, மக்கள்பக்கம்நின்று முடிவொன்றை எடுக்க வேண்டும்.” - என்றார்.

## இனவாதிகளைக் கூண்...

(முதலாம் பக்ககத் தொடர்ச்சி...)

- இவ்வாறு முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன வலியுறுத்தினார்.

அவர் மேலும் கூறுகையில்,

“இனவாதிகளால் நாட்டுக்கு அவமானம் ஏற்பட்டுள்ளது. அவர்களை அரசு கைது செய்யாமல் இருப்பது சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது.

அரசியல்வாதிகள், மதத் தலைவர்கள், சிவில் அமைப்புக்களின் தலைவர்கள் எனச் சகல தரப்பினர்களிடையே இனவாதம் கக்குவோர் வெளிப்படையாக நடமாடுகின்றார்கள். அவர்களை அரசு கைது செய்ய வேண்டும்.

இனவாதிகளை வைத்துக்கொண்டு ஆட்சியைத் தொடரலாம் அல்லது ஆட்சியைப் பிடிக்கலாம் என்று எவரும் நினைத்தால் அது முட்டாள்தனம். இனவாத ஆட்சி ஒருபோதும் நிலைக்காது.” - என்றார்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## ரணிலின் சீரழிப்பு!

தென்னிலங்கை வாக்காளர்களின் அமோக ஆதரவோடு நிறைவேற்றதிகார ஜனாதிபதி பதவிக்கு வந்த கோட்டாபய ராஜபக்ஷ அந்த வாய்ப்பைப் போட்டடிக்க, அப்போது அரசியலில் எங்கோ ஒரு மூலைக்குள் - குப்பைக் கூடைக்குள் - வீசப்பட்டு, புறமொதுக்கப்பட்டு கிடந்த ரணில் விக்கிரமசிங்கவுக்கு அதிர்ஷ்டம் அடித்தது.

அந்த வாய்ப்பை அவரும் போட்டடிக்கின்றார் என்றே தோன்றுகின்றது.

நாட்டில் சட்டத்தின் ஆட்சியையும், ஜனநாயக விழுமியங்களையும் தனது நரி தந்திர அணுகுமுறை போக்கினால் சீரழித்து, குசும்பு பண்ணி வருகின்றார் ரணில். சட்ட - ஜனநாயக ஆட்சியில் முக்கிய கட்டமைப்புகளை நிறைவேற்றதிகாரத்தின் குறுக்குத்தனமான அணுகுமுறையால் சின்னாபின்னமாக்கி வருகின்றார் அவர் என்றே தோன்றுகிறது.

கோட்டாபய ராஜபக்ஷவின் பதவிக் காலத்தில் நிறைவேற்றதிகார ஜனாதிபதி வசம் அரசமைப்பின் இருபதாம் திருத்தம் மூலம் குவிக்கப்பட்ட பல அதிகாரங்கள், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் காலத்தில் 22 ஆம் அரசமைப்பு திருத்தத்தின் மூலம் மீளப் பெறப்பட்டன, நாடாளுமன்றத்திடமும் பிற தரப்புகளிடமும் அவை மீளளிக்கப்பட்டன என்றெல்லாம் கூறப்பட்டது. ஆனால் அப்படிப் பகிர்ந்தளிக்கப்பட்ட விடயங்களையே கேள்விக்குள்ளாக்கி, குழப்பம் ஏற்படுத்தி வருகின்றார் ரணில்.

சுயாதீன தேர்தல் ஆணைக்குழுவுக்கு தேர்தல்களை உரிய காலத்தில் அறிவிப்பது, நடத்துவது போன்ற விடயங்கள் தொடர்பாக இருக்கும் தனித்துவ அதிகாரத்தை, அந்த ஆணைக்குழுவின் செயற்பாடுகளுக்கான நிதி ஒதுக்கீட்டை வெட்டுவதன் மூலம் குட்டிச்சுவராக்கியுள்ளார் ரணில்.

நாட்டின் முக்கிய உயர் பதவிகளுக்கு உரியவர்களை நியமிப்பது தொடர்பான அதிகாரம் தனி ஒருவரிடம் குவிக்கப்படக்கூடாது என்ற ஜனநாயக கோட்பாட்டு விழுமிய அடிப்படையில் தோற்றுவிக்கப்பட்டதுதான் அரசமைப்புக் கவுன்ஸில் முறைமை. பொலிஸ்மா அதிபர் நியமன விவகாரத்தில் சிறுபிள்ளைத்தனமாக நடப்பதன் மூலம் அரசமைப்பு கவுன்ஸில் மூலமான தனித்துவ முறைமையையே அர்த்தமற்றதாகி வருகின்றார் ஜனாதிபதி.

ஏற்கனவே தமது பதவிக்காலத்தை முடித்த பொலிஸ்மா அதிபருக்கு, அரசமைப்புக் கவுன்ஸிலின் அனுமதியின்றி, அதன் தீர்மானத்துக்கு முடிவுக்கு மாறாக, நான்காவது தடவையாக பதவி நீடிப்பு வழங்கி இருக்கின்றார் ரணில் விக்கிரமசிங்க. அரசமைப்பு கவுன்ஸிலால் அங்கீகரிக்கப்படாதவர் - அரசமைப்பு கவுன்ஸில் தனது அங்கீகாரத்தை வழங்க மறுத்தவர் - கடந்த ஒரு மாத காலமாக நாட்டின் பொலிஸ்மா அதிபராக செயற்படுகின்றார்.

இதன் மூலம் அரசமைப்புக் கவுன்ஸிலின் வலிமை - அதிகாரம் - தேவை - பொறுப்பு - கடப்பாடு, எல்லாம் கேள்விக்குறியாகி விட்டன.

நாட்டின் அரசாட்சிக் கட்டமைப்பு முறைமையையே கெடுத்துச்சீரழித்து, விட்டுத்தான், கதிரையை விட்டு இறங்குவார் போல இந்த நரி தந்திர சாலி.

## நான்காயிரத்து 672 பேருக்கு புதிதாக அதிபர் நியமனங்கள்

புதிதாக 4,672 பேருக்கு அதிபர் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

அதிபர் சேவையின் 03 ஆம் தரத்திற்காக இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்தவின் தலைமையில், கொழும்பு டி.எஸ்.சேனாநாயக்க வித்தியாலயத்தில் நியமனக் கடிதங்களை வழங்கும் பிரதான நிகழ்வு நேற்று நடைபெற்றது.

2019 ஆம் ஆண்டு இடம்பெற்ற அதிபர் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு இந்த நியமனங்கள் வழங்கப்பட்டன.

இவர்கள், மாகாண சபைகள் ஊடாக அதிபர் வெற்றிடம் நிலவும் பாடசாலைகளுக்கு நியமிக்கப்படுவார்கள் என கல்வி அமைச்சர் இதன்போது தெரிவித்துள்ளார்.

## இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் செயலாளர் இராஜினாமா செய்தார்



இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் செயலாளராக கடமையாற்றிய மொஹான் டி சில்வா நேற்றுத் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

ஸ்ரீ லங்கா கிரிக்கெட் நிறுவனத்தின் செயலாளராகக் கடமையாற்றிய மொஹான் டி சில்வா தனது இராஜினாமா கடிதத்தை தலைவர் சம்மி சில்வாவிற்கு அனுப்பியுள்ளார்.

தனிப்பட்ட காரணம் மற்றும் தனது உடல்நிலையை கருத்திற்கொண்டு பதவியில் இருந்து இராஜினாமா செய்ய தீர்மானித்துள்ளேன் என அவர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

தனதும் கிரிக்கெட் நிறுவனத்தின் நலனுக்காகவும் இந்த முடிவினை மேற்கொண்டேன் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை கிரிக்கெட் அணியின் தோல்விகளுக்குத் தெரிவுக்குழுவும் இலங்கை கிரிக்கெட் நிறுவனமும் பொறுப்பேற்க வேண்டும் என விளையாட்டுத்துறை அமைச்சர் குற்றம் சுமத்திய பின்னணியிலேயே மொஹான் டி சில்வா இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளார்.

இலங்கைக் கிரிக்கெட் அணியின் தோல்விகளுக்குப் பொறுப்பேற்று கிரிக்கெட் நிறுவனத்தின் தெரிவுக்குழு மற்றும் அதிகாரிகள் பதவி விலக வேண்டும் என விளையாட்டுத்துறை அமைச்சர் நேற்று முன்தினம் வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிட்டிருந்தார்.

இலங்கை கிரிக்கெட் அணியின் தோல்விகளுக்கு தேர்வுக் குழுவும், இலங்கை கிரிக்கெட் நிறுவனமும் பொறுப்பேற்க வேண்டும் என விளையாட்டுத்துறை அமைச்சர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்த நிலையில், இலங்கை கிரிக்கெட் நிறுவனத்திற்கு முன்பாக சிலர் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தோல்விகள் மற்றும் அணியின் வீழ்ச்சிக்கு காரணமான அனைவரும் பதவிகளை இராஜினாமா செய்ய வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

**வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2023**

“உலகம் நாளை துண்டுகளாக உடைந்து அழியப்போவதாக நான் அறிந்தாலும் இன்றும் ஒரு மரத்தை நடுவேன்.”

– மார்ட்டின் லூதர் (ஜேர்மனிய கத்தோலிக்க மதகுரு)

# சண்டிலிப்பாய் – சங்கானை இடையே வழிப்பறி கொள்ளையில் ஈடுபடும் குழு

## பொலிஸ் நடவடிக்கை குறித்து அதிருப்தி



சண்டிலிப்பாய் – சங்கானை இடையே வழிப்பறி கொள்ளையில் ஈடுபடும் கும்பல் தொடர்பில் மானிப்பாய் பொலிஸாருக்கு முறைப்பாடு வழங்கியும் நடவடிக்கை இல்லை என்று விசனம் வெளியிடப்பட்டுள்ளது.

காரைநகர் – யாழ்ப்பாணம் முதன்மை வீதியில் சங்கானைக்கும் ச்ண்டிலிப்பாய்க்கும் இடையே இந்த வழிப்பறி கொள்ளை சம்பவங்கள் அண்மைய நாள்களில் அதிகரித்துள்ளன.

வியாழனன்று ஓட்டோவில் பயணித்த அரிசி ஆலை உரிமையாளரை மறித்த மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் அவரைத் தாக்கிவிட்டு கழுத்திலிருந்த சங்கிலியை அபகரித்துத் தப்பித்துள்ளனர்.

வங்கியில் பணம் வைப்பிலிடுவதற்கு சென்ற போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அண்மைய நாள்களில் பெண் ஒருவர் உள்பட மேலும் பலரிடம் இந்தப் பகுதியில் வழிப்பறி கொள்ளை இடம்பெற்றுள்ளது.

அவை தொடர்பில் முறைப்பாடுகள் வழங்கப்பட்டும் சம்பவத்துடன் தொடர்புடையவர்களின் அடையாளங்களை வழங்கிய போதும் மானிப்பாய் பொலிஸார் நடவடிக்கை எடுக்கவில்லை என விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# நானுஓயாவில் வெள்ளம்

நுவரெலியா மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக பெய்து வரும் கடும் மழை காரணமாகவும் மாவட்டத்தின் பல பாகங்களிலும் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக மக்களின் இயல்பு நிலை பாதிக்கப்பட்டுள்ளது.

இடைவிடாது பெய்து வரும் கடும் மழை காரணமாக வெள்ளபெருக்குடன் சிறு சிறு மண்சரிவுகளும் ஏற்பட்டுள்ளன.

குறிப்பாக 476ஃஏ கிரிமிட்டி கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் டெஸ்போட் , கிரிமிட்டி , கிளாரண்டன் போன்ற பகுதிகளில் வெள்ள நீர் பெருக்கத்தால் விவசாய நிலங்கள் மற்றும் தோட்ட தொழிலாளர்களின் குடியிருப்புகளும் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்துள்ளனர்.

மரக்கறி தோட்டங்களில் வெள்ளம் பாய்ந்தோடியதால், பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அதிகமாக நானுஓயா கிளாரண்டன் மற்றும் டெஸ்போட் பகுதிகளில் நேற்று சனிக்கிழமை பிற்பகல் வேளையில் பெய்த அடை மழை காரணமாக அதிகளவான மரக்கறி தோட்டங்கள் நீரில் மூழ்கியுள்ளன.

கால்வாய்கள் முறையாக பராமரிக்கப்படாத நிலையில் வெள்ளம் ஏற்பட்டமை விவசாயக் காணிகள் நீரில் மூழ்குவதற்கு முக்கிய காரணம் என விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

# மதிப்பீட்டு பணிகளில் இருந்து விலக கிராம உத்தியோகத்தர்கள் தீர்மானம்

சனத்தொகை மற்றும் வீட்டு வசதிகள் மதிப்பீட்டு பணிகளில் ஈடுபடுவதற்காக உரிய கொடுப்பனவு வழங்கும் வரையில் அந்த பணிகளில் இருந்து விலகுவதற்கு கிராம உத்தியோகத்தர்கள் தீர்மானித்துள்ளனர்.

இலங்கை ஐக்கிய கிராம உத்தியோகத்தர்கள் சங்கத்தின் தலைவர் கமல் கித்சிறி இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

அத்துடன், இந்த தொழிற்சங்க நடவடிக்கைக்கு ஏனைய கிராம உத்தியோகத்தர்களின் சங்கங்களும் ஆதரவு வழங்கவுள்ளன என அவர் குறிப்பிட்டார்.

பத்து வருடங்களுக்கு ஒரு முறை முன்னெடுக்கப்படும் சனத்தொகை மற்றும் வீட்டு வசதிகள் மதிப்பீட்டு பணிகள் இந்த மாதம் முதலாம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டன.




இதன்படி, சனத்தொகை மதிப்பீட்டில் முதல் கட்டமாக ஜனாதிபதி செயலகம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

# சாதிவாரி கணக்கெடுப்பை பா.ஜ.க. எதிர்க்கவில்லை!

## - மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தெரிவிப்பு

சாதிவாரி கணக்கெடுப்பை பா.ஜ.க. எதிர்க்கவில்லை என்றும், அது தொடர்பாக விவாதித்து முடிவு எடுக்கப்படும் எனவும் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தெரிவித்துள்ளார்.




சத்தீஸ்கர் மாநில சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு, பா.ஜ.கவின் தேர்தல் அறிக்கை தலைநகர் ராய்ப்பூரில் வெளியிடப்பட்டது. தேர்தல் அறிக்கையை வெளியிட்ட உள்துறை அமைச்சர் அமித் ஷா பின்னர் செய்தியாளர்களின் கேள்விகளுக்குப் பதில் அளித்தார். அப்போது அவர் தெரிவிக்கையில்,

நாங்கள் எங்கள் தேர்தல் அறிக்கையை இன்று வெளியிட்டுள்ளோம். இது வெறும் தேர்தல் அறிக்கை மட்டுமல்ல, இது எங்களின் தீர்மானம். பா.ஜ.க. ஆட்சிக்கு வந்ததும் அடுத்த 5 ஆண்டுகளில் சத்தீஸ்கரை முழுமையாக வளர்ச்சி பெற்ற மாநிலமாக நாங்கள் மாற்றிக் காட்டுவோம்.

காங்கிரஸ் தேர்தல் அறிக்கையில் ஏராளமான வாக்குறுதிகள் அளிக்கப்பட்டிருப்பது குறித்து கேட்கிறீர்கள். முதல்வர் பூபேஷ் பெகலைவிட பொய்யான விளம்பரங்களைக் கொடுப்பவர்கள் வேறு யாரும் இருக்க முடியாது. அவர் எப்படி வேண்டுமானாலும் பொய்யான வாக்குறுதிகளைக் கொடுக்கலாம். அதற்கேற்பவே சமூகச் சூழலை அவர் சத்தீஸ்கரில் ஏற்படுத்தி இருக்கிறார்.

விவசாயிகளின் கடன்கள் தள்ளுபடி செய்யப்படும் என காங்கிரஸ் வாக்குறுதி கொடுத்துள்ளது. ஊழல் இல்லாத அரசை அவர் வழங்கி இருந்தால், இதுபோன்ற தள்ளுபடிகளுக்குத் தேவை இருந்திருக்காது. மக்கள் பல்வேறு அளவுகோல்களின் அடிப்படையில் வாக்குகளை செலுத்துகிறார்கள். பா.ஜ.க. ஆட்சியில், சத்தீஸ்கரில் நக்சல் தீவிரவாதம் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டது. சட்டம் – ஒழுங்கு நன்கு பேணப்பட்டது. மக்கள் இதை அறிவார்கள்.

காங்கிரஸ் வெற்றி பெற்றால் சாதி வாரி கணக்கெடுப்பு நடத்தப்படும் என வாக்குறுதி அளித்திருக்கிறார்கள். நாங்கள் அதுபோன்ற வாக்கு வங்கி அரசியலை மேற்கொள்ள விரும்பவில்லை. நாங்கள் சாதிவாரி கணக்கெடுப்பை எதிர்க்கவில்லை. இது குறித்து விரிவான விவாதம் மேற்கொள்ளப்பட்டு முடிவு எடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

# முதல்வர் ஸ்டாலினுக்கு உடல்நலக் குறைவு: சிகிச்சையுடன் ஓய்வெடுக்க அறிவுறுத்தல்

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு வைரல் காய்ச்சல் ஏற்பட்டுள்ளது. காய்ச்சலுக்கான சிகிச்சையோடு, சில நாட்கள் ஓய்வெடுக்கும்படியும் அவருக்கு மருத்துவர் அறிவுறுத்தியுள்ளார்.



இது தொடர்பாக முதல்வர் ஸ்டாலினின் தனிப்பட்ட மருத்துவர் மோகன் காமேஸ்வரன் வெளியிட்டுள்ள மருத்துவ அறிக்கையில்,

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நேற்று முன்தினம் இருமல், காய்ச்சல் அறிகுறிகள் இருந்தன. அதனையடுத்து அவருக்கு மருத்துவப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்நிலையில், அவருக்கு வைரல் ஃப்ளூ காய்ச்சல் உறுதியாகியுள்ளது. இதனால், முதல்வர் காய்ச்சலுக்கான சிகிச்சைகளை மேற்கொள்ளுமாறும், அடுத்த சில நாட்களுக்கு ஓய்வு எடுக்கும் படியும் அறிவுறுத்தப்படுகிறது எனத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று காலையில் சென்னை பெசன்ட் நகரில் 'நடப்போம் நலன் பெறுவோம்' என்ற திட்டத்தை தொடக்கி வைக்க இருந்தார்.

இந்த நிலையில் அந்த நிகழ்ச்சியில் அவருக்குப் பதிலாக அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பங்கேற்றார். அதேபோல் நேற்று முந்தியினம் தலைமைச் செயலகத்தில் சில நிகழ்ச்சிகளை முதல்வர் ஸ்டாலின் ரத்து செய்திருந்தார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் அவருக்கு உடல்நிலை சரியில்லை என்று கூறப்பட்ட நிலையில் முதல்வர் ஸ்டாலினின் உடல்நிலை குறித்து அதிகாரபூர்வ மருத்துவ அறிக்கை வெளியாகியுள்ளது.

## சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை: ஒய்.எஸ். சர்மிளா அறிவிப்பு



தெலுங்கானாவில் இந்த மாத இறுதியில் இடம்பெறவுள்ள சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என ஒய்.எஸ்.ஆர். தெலங்கானா கட்சியின் தலைவர் ஒய்.எஸ்.சர்மிளா தெரிவித்துள்ளார்.

தெலுங்கானாவிலுள்ள கட்சி அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் காங்கிரஸ் கட்சிக்கு ஆதரவளிக்க தீர்மானித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆந்திரா முதல்வர் ஒய்.எஸ்.ஜெகன் மோகன் ரெட்டியின் தங்கையான ஒய்.எஸ். ஷர்மிளா, தெலங்கானாவில் ஒய்.எஸ். ஆர்.தெலங்கானா கட்சி என்ற கட்சியை நடத்தி வருகிறார்.

# காசாவில் பாடசாலை மீது இஸ்ரேல் குண்டு தாக்குதல்!

## 15 பேர் உயிரிழப்பு, 54 பேர் காயம்



காசாவில் அல்-ஃபகூரா என்ற பாடசாலை மீது இஸ்ரேல் குண்டுவீசி தாக்குதல் நடத்தியதில் 15 பேர் உயிரிழந்துள்ளனர். 54 பேர் காயமடைந்துள்ளனர் என தகவல் வெளியாகியுள்ளது.

காசா மீதான தரைவழி தாக்கு தலை இஸ்ரேல் இராணுவம் தீவிரப்படுத்தியுள்ளது. இதனால், போர் தீவிரமடையும் அபாயம் அதிகரித்துள்ளது.

வடக்கு காசாவில் உள்ள பாலஸ்தீனியர்கள் உடனடியாக வெளியேறுமாறு இஸ்ரேல் பலமுறை எச்சரிக்கைவிடுத்த போதிலும், ஆயிரக்கணக்கான பாலஸ்தீனியர்கள் அப்பகுதியை விட்டு வெளியேறவில்லை. அதோடு, 'போர் நிறுத்தம் என்பது ஹமாஸிடம் இஸ்ரேல் சரணடைவதற்கு சமமானது. ஹமாஸுக்கு எதிரான போரில் வெற்றிபெறும் வரை இஸ்ரேல் போரிடும்' என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கூறியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில், காசாவில் உள்ள பாடசாலைகள், தங்குமிடங்கள், மருத்துவமனைப் பகுதிகள் மற்றும் நோயாளர் காவுவண்டிகள் குறிவைத்து இஸ்ரேல் இராணுவம் குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தி வருகிறது. இதனால், பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். காசா நகரில் நேற்று முன்தினம் நோயாளர் காவுவண்டிகள் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் குறைந்தது 15 பேர் கொல்லப்பட்டனர் என சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

இது தொடர்பாக காசாவின் செய்தித் தொடர்பாளர் அஷ்ரப் அல்-குத்ரா செய்தியாளர்களிடம் கூறுகையில், ஒக்டோபர் 7 முதல் 150 துணை மருத்துவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். 27 நோயாளர் காவுவண்டிகள் முற்றிலுமாக அழிக்கப்பட்டுள்ளன. பலியானவர்களில் பெரும்பாலனவர்கள் பாடசாலையில் அமர்ந்திருந்த பெண்கள், குழந்தைகள் என தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் இராணுவம் அல்-ஃபகூரா என்ற பாடசாலை மீது குண்டு வீசி தாக்குதல் நடத்தியதில் 15 பேர் உயிரிழந்தனர். 54 பேர் காயமடைந்தனர்.

கடந்த 24 மணி நேரத்தில் மட்டும் இஸ்ரேல் நடத்திய தாக்கு தலில் குறைந்தது 231 பேர் உயிரிழந்திருக்கின்றனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பொதுவாகவே போரின்போது மக்கள் வசிக்கும் பகுதிகள், பாடசாலை, கல்லூரி, மருத்துவமனை, வழிபாட்டு தலங்கள் ஆகியவற்றின் மீது தாக்குதல் நடத்தக் கூடாது.

ஆனால், தொடக்கம் முதலே இஸ்ரேல் போர் நெறிமுறைகளை மீறி தாக்குதல் நடத்தி வருவதாக பாலஸ்தீனம் தரப்பில் குற்றம்சாட்டப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. சுமார் 2 ஆயிரத்து 200 பேர் இடிபாடுகளுக்கு அடியில் புதைந்துள்ளனர் என காசா சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் மீது ஹமாஸ் தீவிரவாதிகள் கடந்த மாதம் 7 ஆம் திகதி தாக்குதல் நடத்தியதால், காசா மீது இஸ்ரேல் இராணுவம் போர் தொடுத்தது.

காசாவின் வடக்கு பகுதியில் கடந்த 7 ஆம் திகதி முதல் வான்வழி தாக்குதலை நடத்திய இஸ்ரேல், தற்போது தரைவழி தாக்குதலை மேற்கொண்டு வருகிறது.

காசாவில் உள்ள ஜபாலியா அகதிகள் முகாமில் இரண்டு நாளில் இரு முறை நடத்தப்பட்ட தாக்குதலில் நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர். இது போர் குற்றத்துக்கு ஈடான செயல் என ஐ.நா மனித உரிமைகள் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் தாக்குதலில் காசாவில் இதுவரை 3 ஆயிரத்து 760 குழந்தைகள் உட்பட 9 ஆயிரத்து 61 பேர் உயிரிழந்துள்ளனர் என காசா சுகாதாரத் துறை அமைச்சகம் ஏற்கெனவே தெரிவித்துள்ளது.

# நேபாளத்தில் இடம்பெற்ற நிலநடுக்கத்தில் பலியானோர் எண்ணிக்கை 150 ஐ கடந்தது

நேபாளத்தில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் பலியானோர் எண்ணிக்கை 150 ஐ கடந்துள்ளது.

நேபாளத்தில் நேற்று முன்தினம் இரவு 11.32 மணியளவில் ஏற்பட்ட நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 6.4 ஆக பதிவானது.

இந்த நிலநடுக்கத்தில் பலியானோர் எண்ணிக்கை தற்போது 150-ஐ கடந்துள்ளது.

மேற்கு நேபாளத்தின் ஜோஜர்கோட் மற்றும் மேற்கு ருகும் மாவட்டங்களில் 100 இற்கும் மேற்பட்டோர் காயம் அடைந்துள்ளனர்.

இதையடுத்து, நேற்று பிற்பகல் மீண்டும் 3.3 அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளமை மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

தொடர்ந்து மீட்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும் பலர் இடிபாடுகளில் சிக்கியிருக்கலாம் என்பதால், பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

இது 2015 ஆம் ஆண்டுக்குப் பின்னர் நேபாளத்தில் ஏற்பட்ட மிக மோசமான நிலநடுக்கம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



# ரயில் சேவைகள் தொடர்பில் ஆராய்வதற்கு குழு நியமனம்

நாட்டின் ரயில் சேவையில் மேற்கொள்ளப்பட வேண்டிய மாற்றங்கள் தொடர்பில் ஆராய்வதற்காக ஜனாதிபதியினால் நிபுணர் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

இந்த குழுவில் ரயில்வே திணைக்களத்தின் முன்னாள் பொது முகாமையாளர்கள் இருவர் உள்ளடக்கப்பட்டுள்ளனர் என அமைச்சர் குறிப்பிட்டார்.

ரயில் சேவை ஒரு திணைக்களமாகக் காணப்படுவதால், தீர்மானங்களை மேற்கொள்வதில் அதிகக் காலம் செலவிடப்படுகிறது என அவர் தெரிவித்தார்.

அத்துடன், ரயில்வே திணைக்களம் வர்த்தக செயற்பாடுகளில் ஈடுபடுவதைக் கருத்திற்கொண்டு, அதனை அதிகார சபையாக மாற்றுவது தொடர்பில் அமைச்சரவைப் பத்திரமொன்றை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது எனப் போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன குறிப்பிட்டார்.

இதற்கமைய, ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டுள்ள குழுவின் அறிக்கை கிடைத்த பின்னர், அதன் பரிந்துரைகளின் அடிப்படையில் மக்களுக்கு சிறப்பான சேவைகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.



# இலங்கை ரூபாவின் பெறுமதி 10.3 வீதத்தால் வலுவடைந்தது

இந்த வருடத்தில் அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி 10.3 வீதத்தால் வலுவடைந்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட தரவுகளின் அடிப்படையில், வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி 10.3 வீதத்தால் வலுவடைந்துள்ளது.

இந்திய ரூபாவிற்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி 10.9 வீதம் வலுவடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

யூரோ அலகுடன் ஒப்பிடும்போது, இலங்கை ரூபாவின் பெறுமதி 10.9 வீதம் வலுவடைந்துள்ளது என இலங்கை மத்திய வங்கியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.





# சிரேஷ்ட ஊடகர் இரா.துரைரத்தினம் எழுதிய ‘கிழக்கில் சிவந்த சுவடுகள்’ நூல் வெளியீடு!

- பழுவூரான் -

சிரேஷ்ட ஊடகவியலாளர் இரா.துரைரத்தினம் எழுதிய “கிழக்கில் சிவந்த சுவடுகள்“ நூல் நேற்று சனிக்கிழமை மட்டக்களப்பு பொதுநூலக கேட்போர் கூடத்தில் கிழக்கிலங்கைச் செய்தியாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

கிழக்கிலங்கை செய்தியாளர் சங்க உறுப்பினரும், சிரேஷ்ட ஊடகவியலாளருமான செல்லையா பேரின்பராசா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், மட்டக்களப்பு மாவட்டத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் இராசபுத்திரன் சாணக்கியன் பிரதம அதிதியாகவும், முன்னாள் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் மா.உதயகுமார், சிரேஷ்ட ஊடகவியலாளரும்,விரிவுரையாளருமானஅ.நிக்ஸன் ஆகியோர் சிறப்பு அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.

இதன்போது வெளியீடு செய்யப்பட்ட “கிழக்கில் சிவந்த சுவடுகள்” நூலின் அறிமுகவுரையை முன்னாள் கோட்டக் கல்விப் பணிப்பாளர் அ.சுகுமாரும், நூல் நயவுரையை சிரேஷ்ட எழுத்தாளர் கி.துரைராசசிங்கமும் நிகழ்த்தினர்.

நூலின் முதல் பிரதியினை முன்னாள்நாடாளுமன்றஉறுப்பினர்பா.அரியநேத்திரன் பெற்றுக் கொண்டார்.

இறுதியாக ஏற்புரையையும், நன்றியுரையையும் இணைத்து சிரேஷ்ட ஊடகவியலாளரும், நூலாசிரியருமான இரா.துரைரத்தினம் நிகழ்த்தினார்.





# வடமாகாணத்தில் 401 புதிய அதிபர்கள் நியமனம்







அதிபர் தரத்திற்கு ஆள்சேர்ப்புக்கான போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த 401 புதிய அதிபர்களுக்கான நியமனக் கடிதங்கள் நேற்று யாழ்ப்பாணம் கோப்பாயில் உள்ள ஆசிரியர் பயிற்சி நிலையத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டன.

வடமாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ் மற்றும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

வடமாகாணத்தில் சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் பாடசாலைகளில் நிலவும் அதிபர் வெற்றிடங்களுக்கு இவர்கள் அதிபர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று வழங்கப்பட்ட புதிய அதிபர்கள் நியமனங்களுடன் வடமாகாண பாடசாலைகளில் நிலவும் அதிபர் வெற்றிடங்கள் நிரப்பப்படும் என வடமாகாண கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.





# அதிக விலைக்கு சீனியை விற்பனை செய்யும் வர்த்தகர்களைக் கைது செய்ய நடவடிக்கை

நிர்ணயிக்கப்பட்ட அதிகபட்ச சில்லறை விலையை விட அதிக விலைக்கு சீனியை விற்பனை செய்யும் வர்த்தகர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதற்கமைய, நாடளாவிய ரீதியில் நுகர்வோர் அதிகார சபை நேற்று முதல் தமது சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறது எனக் குறிப்பிட்டுள்ளது.

அவ்வாறு கைது செய்யப்படும் வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது.

சீனிக்கான அதிகபட்ச சில்லறை விலையை நிர்ணயிக்கும் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் நேற்று முன்தினம் முதல் அமுலாகும் வகையில் நுகர்வோர் விவகார அதிகாரசபையினால் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி, பொதியிடப்படாத ஒரு கிலோகிராம் வெள்ளை சீனியின் விலை 275 ரூபாயாகவும், பொதி செய்யப்பட்ட ஒரு கிலோகிராம் வெள்ளை சீனியின் விலை 295 ரூபாயாகவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் பொதி செய்யப்படாத ஒரு கிலோகிராம் சிவப்பு சீனியின் அதிகபட்ச சில்லறை விலை 330 ரூபாயாகும்.

பொதி செய்யப்பட்ட ஒரு கிலோ கிராம் சிவப்பு சீனியின் விலை 350 ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

# தாவணி அணிந்து தப்பியோடிய விசித்திர திருடன் பிடிபட்டான்!

## புத்தளத்தில் நடந்த சுவாரசிய சம்பவம்



- ரஸீன் ரஸ்மின் -

பாலாவி – முல்லை ஸ்கீம் கிராமத்தில் யாருமே இல்லாத வீடொன்றில் திருட வந்த திருடன் அந்த வீட்டில் படுத்துறங்கிய பின், தனது உடம்பை தாவாணியால் மறைத்த நிலையில் தப்பியோடிய விசித்திரமான சம்பவம் ஒன்று நேற்றுப் பதிவானது. எனினும் அந்தத் திருடன் பின்னர் மடக்கப்பட்டான்.

இந்த சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது:–

நேற்று அதிகாலை 3 மணிக்கும் 4 மணிக்கும் இடையில் 35 வயது மதிக்கத்தக்க திருடன் ஒருவன் முல்லை ஸ்கீம் கிராமத்திற்கு வந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இரவு நேரப் பாதுகாப்பு பணியில் ஈடுபட்ட நடமாடும் பொலிஸ் வாகனம் ஒன்று அந்தப் பகுதியால் வருகை தந்ததை அவதானித்த திருடன், முல்லை ஸ்கீம் கிராமத்தில் உள்ள வீடொன்றுக்குள் புகுந்துள்ளான் எனக் கூறப்படுகிறது. அந்த வீட்டிற்குள் அச்சமயம் யாருமே இருக்கவில்லை.

வீட்டிற்குள் சமயலறை ஊடாக நுழைந்த திருடன், சமயலறையில் இருந்த குப்பி விளக்கொன்றை ஏற்றி வெளிச்சத்தை வரவைத்துள்ளான்.

பின்னர், அந்த வீட்டில் இருந்த நுளம்பு வலையை எடுத்து தூங்குவதற்கான ஏற்பாடுகளை செய்துள்ளான். அந்த வீட்டில் இருந்த துணிகளை எடுத்து தலையணைக்காகவும் பயன்படுத்தியுள்ளான்.

மேலும், பீடிகளைப் புகைத்துள்ள அந்த திருடன், ஐஸ் போதைப் பொருளும் பாவித்துள்ளான் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில், நேற்று காலை 8 மணியளவில் யாருமில்லாத அந்த வீட்டிலிருந்து சத்தம் வருவதை அந்த வீட்டிற்குப் பக்கத்திலுள்ளவர் அவதானித்துள்ளனர்.

அங்கு நபர் ஒருவரின் நடமாட்டம் இருப்பதை அவதானித்த பக்கத்துவீட்டார் இதுபற்றி வீட்டின் உரிமையாளருக்கு தொலைபேசி ஊடாக தகவல் வழங்கியமையுடன் ஏனையோருக்கும் தெரியப்படுத்தியுள்ளார்.

ஆயினும், அந்த வீட்டிலிருந்த திருடன் தப்பிச் சென்றுள்ளான் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தான் அணிந்து வந்த ஆடைகளை கழற்றி தங்கியிருந்த வீட்டின் சமயலறையில் வைத்துவிட்டு, அந்த வீட்டிலிருந்த பெண்கள் அணியும் தாவாணி ஒன்றை உடுத்தியபடியே அங்கிருந்து அவன் தப்பியுள்ளான்.

இவ்வாறு தாவாணி உடுத்திய நிலையில் தப்பிச் செல்லும் காட்சிகள் அந்தக் கிராமத்தின் சில வீடுகளில் பொருத்தப்பட்ட சீ.சி.டி.வி கமராக்களில் பதிவாகியுள்ளன.

இந்தச் சம்பவத்தை கேள்விப்பட்ட முல்லை ஸ்கீம் இளைஞர்களும் ஊர் மக்களும் ஒன்று சேர்ந்து தப்பியோடிய திருடனைத் தேடும் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

இந்த நிலையில், பெண்கள் அணியும் தாவாணியோடு அந்த கிராமத்தின் பற்றைக்குள் பதுங்கியிருந்த நிலையில் ஊர் மக்களால் திருடன் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டான்.

இந்தத் திருடன் ஏற்கனவே பல திருட்டு சம்பவங்களில் தொடர்புடையவன் என்றும், நீதிமன்றத்தினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட நிலையில் பொலிஸாரால் தேடப்பட்டு வந்தவன் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் புத்தளம் தலைமையகப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

புத்தளம் – பாலாவி அல்காசிமி சிட்டி கிராமத்தில் இவ்வாறு நூதனமான முறையில் அடிக்கடி பல திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன என அக்கிராம மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.



# ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனத்திற்கு முன்னால் போராட்ட முஸ்தீபு; பொலிஸ் பலத்த பாதுகாப்பு



ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனத்திற்கு முன்பாக பல தரப்பினரால் நேற்றுக் காலை போராட்டம் முஸ்தீபு முன்னெடுக்கப்பட்டது.

இதையடுத்து, கிரிக்கெட் நிறுவனத்திற்கு முன்பாகப் பாதுகாப்பைப் பலப்படுத்த பொலிஸாரும் கலகத் தடுப்புப் பிரிவினரும் அழைக்கப்பட்டனர்.

இதேவேளை, உலகக் கிண்ணத் தொடரில் இலங்கைக் கிரிக்கெட் அணியின் படு தோல்வி காரணமாக, இலங்கைக் கிரிக்கெட் தேர்வுக் குழு மற்றும் நிறுவன நிர்வாகிகள் உடனடியாக இராஜினாமாச் செய்ய வேண்டும் என அரசியல்வாதிகள், சிவில் ஆர்வலர்கள் மற்றும் விளையாட்டு ரசிகர்கள் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் இலங்கை அணி தோல்வியடைந்தது. இந்த நிலையில், தற்போதைய இலங்கை கிரிக்கெட் நிர்வாகிகள் மற்றும் தெரிவுக்குழு மீது சமூக வலைத்தளங்களில் கடும் விமர்சனங்கள் எழுந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# மூன்றாம் தவணையின் முதல் கட்டம் டிசம்பர் 22 ஆம் திகதியுடன் நிறைவு

2023 ஆம் ஆண்டுக்கான பாடசாலை மூன்றாம் தவணையின் முதல் கட்டம் எதிர்வரும் டிசம்பர் மாதம் 22 ஆம் திகதி நிறைவடையும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

2023 ஆம் ஆண்டுக்கான பாடசாலை மூன்றாம் தவணையின் முதல் கட்டம் முதலாம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.

இதன்படி, அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகள் மூன்றாம் தவணைக்கான இரண்டாம் கட்டப் பாடசாலைகள் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 2 ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என கல்வி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

2023 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுச் சான்றிதழ் உயர்தரப் பரீட்சை 2024 ஆம் ஆண்டு ஜனவரி 4ஆம் திகதி முதல் நடத்தப்பட உள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 05.11.2023




இன்று செய்யும் செயல்கள் யாவற்றிலும் பொறுமை தேவை. உணர்ச்சிகளை கட்டுப்படுத்துவதன் மூலம் எளிதாக அணுகலாம். தெய்வீக பாடல்களை கேட்பதன் மூலம் உங்களுக்கு திருப்தியும் ஆறுதலும் கிடைக்கும்.

பணியிடத்தில்உங்கள்புத்திசாலித்தனத்தைபயன்படுத்தி வெற்றி பெறுவீர்கள் திட்டமிட்டு ஒழுங்கான முறையில் பணியாற்றுவது உங்களுக்கு உதவிகரமாக இருக்கும்.

உங்கள் துணையுடனான உறவில் நல்லிணக்கத்தை பராமரிக்க மகிழ்ச்சியை தக்க வைக்க விட்டுகொடுத்து செல்ல வேண்டும்.

பண வரவு இன்று திருப்திகரமாக இருக்காது. சேமிப்பதற்கான வாய்ப்பும் குறைவு.

தாயின் சிறிய உடல் நலப் பிரச்சினை ஒன்றிற்காக மருத்துவ செலவு செய்ய நேரும்.




உங்கள் புத்திசாலித்தனத்தினால் இன்று முன்னேற்றமான பலன்களைக் காண்பீர்கள். சுயமாக முன்னேறுவீர்கள். உங்களின் இனிமையான வார்த்தை மூலம் பிறரை திருப்தி படுத்துவீர்கள்.

பணி நிமித்தமான சிறிய பயணம் ஒன்று நேரலாம். இந்தப் பயணம் பயனுள்ளதாக இருக்கும்.

உங்கள் துணையிடம் அன்பான உறவுமுறை கொண்டிருப்பீர்கள். இதனால் உங்கள் வாழ்க்கைத் துணை உங்களை நன்கு புரிந்து கொள்ள முடியும்.

உங்கள் நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும். இன்று கணிசமான தொகை சேமிப்பீர்கள்.

இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படும். ஆரோக்கியப் பிரச்சினை ஏதும் இருக்காது.




இன்று பொறுமை இழக்க வாய்ப்புள்ளதால் அமைதியாகவும் கட்டுப்பாடுடனும் இருக்க வேண்டும். தியானம் மேற்கொள்வதன் மூலம் ஆறுதல் பெறலாம்.

குறித்த நேரத்தில் பணி முடிப்பது சற்று கடினமாக இருக்கும். கூடுதல் பணிகளை சமாளிக்க கூடுதல் முயற்சி தேவை.

உங்கள் துணையுடன் ஆரோக்கியமான உறவை பராமரிக்க கவனமாக பழக வேண்டும். இதன் மூலம் நல்லிணக்கம் ஏற்படும்.

பணம் சம்பாதிக்கும் வாய்ப்பு குறைவு. போதிய அளவு சம்பாதித்தாலும் குடும்பத்திற்காக செலவு செய்ய நேரும். சேமிப்பதற்கான வாய்ப்பு குறைவு.

நரம்பு சம்பந்தப்பட்ட பிரச்சினைகளால் பாதிக்கப்படலாம். உங்களை ஆரோக்கியமாக வைத்துக்கொள்ள சிகிச்சை மேற்கொள்ள வேண்டும்.




இன்று சுமுகமான பலன்கள் கிடைக்காது. உங்கள் செயல்களில் தடைகள் ஏற்படும். இதனால் அதிருப்தி உண்டாகும். தேவையற்ற விஷயங்களுக்கு கவலைப்படுவதை தவிர்க்க வேண்டியது அவசியம்.

உங்கள் பணிகளை தரமாக ஆற்ற இயலாது. இதனால் மேலதிகாரிகளின் அதிருப்திக்கு ஆளாவீர்கள்.

உங்கள் துணையிடம் கடுமையாகப் பேசுவீர்கள். உங்கள் கவனமற்ற பேச்சுகள் உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும் என்பதால் வார்த்தைகளில் கவனம் தேவை.

பண வரவு குறைந்து காணப்படும். பயணத்தின் போது பண இழப்புகள் காணப்படும்.

குளிர்ச்சியான உணவுகள் உட்கொள்வதை தவிர்க்க வேண்டும். சளி ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளது.




இன்று குழப்பங்களை ஏற்படுத்தும் வகையில் சில வெறுப்பான சூழ்நிலைகள் உருவாகும். என்றாலும் தெளிவான எண்ணங்களை கொள்ள வேண்டும். பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளில் ஈடுபடுவதன் மூலம் மகிழ்ச்சியாகவும் நம்பிக்கையுடனும் இருக்கலாம்.

பணியிடத்தில் ஏமாற்றமான சூழ்நிலை காணப்படும். பணியில் உங்கள் செயல்திறன் அதிருப்தியை அளிக்கும். பணியிடச் சூழ்நிலை காரணமாக வேறு வேலைக்கு மாற நினைப்பீர்கள்.

உங்கள் குடும்ப பிரச்சினை காரணமாக உங்கள் துணையுடன் மோதல் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

இன்று கூடுதல் செலவினங்கள் காணப்படும். பண இழப்பிற்கான வாய்ப்புகள் அதிகம்.

தோள்கள் மற்றும் கைகளில் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று சாதகமான நாள். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும் நாள். இன்று பொழுதுபோக்கிற்கு உகந்த நாள். உங்கள் தன்னம்பிக்கை அதிகரித்து காணப்படும்.

குறித்த நேரத்திற்குள் வேலையை முடிப்பீர்கள். உங்கள் திறமை உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

உங்கள் துணையார் உங்களுக்கு ஆதரவாக இருப்பார். இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று உங்களின் வங்கியிருப்பு அதிகரிக்கும். உங்கள் கையிருப்பு பணம் உங்களுக்கு போதுமானதாக இருக்கும்.

இன்று ஆரோக்கிய பிரச்சினை ஏதும் இருக்காது. இன்று முழு ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.




இன்று உற்சாகமான வாய்ப்புகள் உங்கள் வளர்ச்சியை மேம்படுத்தும். இன்றைய நாளை சிறந்த முறையில் பயன்படுத்தி திருப்தி காண்பீர்கள்.

உங்கள் முயற்சியில் அர்ப்பணிப்பு காணப்படும். கடினமான பணிகளையும் எளிதாக முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் இனிமையான தருணங்களைப் பகிர்ந்து மகிழ்ச்சியாக இருப்பீர்கள். அவருடன் உங்கள் பொன்னான நேரத்தைக் கழிப்பீர்கள்.

இன்று நிதி வளர்ச்சி காணப்படும். உங்கள் வீட்டில் நடைபெறும் மங்களகரமான நிகழ்ச்சிக்காக பணத்தை செலவு செய்வீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும். நீங்கள் திடமாகவும் வலிமையுடனும் காணப்படுவீர்கள்.




உங்கள் வளர்ச்சியை பாதிக்கும் வகையில் உங்கள் தன்னம்பிக்கை குறைந்து காணப்படும். நம்பிக்கையுடன் செயல்பட்டால் உங்களின் இலட்சியத்தை அடையலாம்.

அதிகமான பணிகள் காரணமாக பணியில் தவறுகள் நேரலாம். சரியாக திட்டமிட்டால் இந்த சவால்களை சமாளிக்கலாம்.

உங்கள் துணையுடன் சூடான விவாதங்கள் காணப்படும். இதனை தவிர்த்தல் வேண்டும்.மகிழ்ச்சியாக இருக்க இருவருக்குமிடையே நல்ல புரிந்துணர்வை வளர்க்க வேண்டும்.

இன்று பணப்புழக்கம் குறைந்து காணப்படும். பண இழப்பும் காணப்படுகின்றது. பணத்தை கவனமாக கையாள வேண்டும்.

இன்று தூக்கமின்மை காரணமாக ஆரோக்கியம் குறைந்து காணப்படும்.

# இன்றைய ராசி பலன்கள் - 05.11.2023




இன்று திறமையாக செயலாற்ற முடியாது. சில சௌகரியங்களை விட்டுக் கொடுக்க வேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணியில் தவறுகள் நேர வாய்ப்புள் ளது. கவனமாப் பணியாற்ற வேண்டும்.

உங்கள் துணையிடம் நட்புடன் பழக வேண்டும். இன்று வேறுபாடுகளைக் களைந்து மகிழ்ச்சியாக இருக்க வேண்டிய நாள்.

இன்று குடும்பச் செலவுகள் அதிகமாக காணப்படும். பணத்தை சாதுர்யமாக செலவு செய்ய வேண்டும். செலவுகளை கண்காணிக்க வேண்டும்.

உங்கள் தாய்க்கு வயிறு சம்பந்தமான பிரச்சினைகள் காணப்படும். அவரின் ஆரோக்கியத்திற்காக பணம் செலவு செய்ய நேரும்.




இன்று சாதகமான நாள். அனைத் தும் எளிதாகவும் சுமுகமாகவும் நடை பெறும். உங்களின் உறுதியான மற்றும் நேர்மறை அணுகுமுறை காரணமாக வெற்றி காண்பீர்கள்.

உங்கள் திறமைக்கு பாராட்டு கிடைக் கும். பணியில் உங்கள் திறமை மற்றும் ஆற்றலை வெளிப்படுத்துவீர்கள்.

உங்கள் துணையுடன் நட்பாக பழக வேண்டும். இதனால் உங்கள் பிரியமனவரிடம் நல்லுறவை ஏற்படுத்திக் கொள்ள முடியும்.

பணப்புழக்கம் அதிகமாக காணப்படும். உங்கள் சேமிப்பு ஆற்றல் அதிகரிப்பதற்கான வாய்ப்பு அதிகம் உள்ளது.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படும்.




இன்று வளர்ச்சி காணப்படும். வாழ் வின் யதார்த்தத்தை புரிந்து கொள்வீர் கள்.புதிய அனுபவங்கள் மகிழ்ச்சியை அளிக்கும்.

பணியிடத்தில் முன்னேற்றகரமான பலன்கள் காணப்படும். உங்கள் பணி யில் உங்களுக்கு திருப்தி கிடைக்கும்.

உங்கள் துணையுடன் இனிமையான வார்த்தை களில் பேசுவீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும். இது உறவின் பிணைப்பை வலுப்படுத்தும்.

இன்று பணப்புழக்கம் போதுமானதாக இருக்கும். உங்களிடம் உள்ள பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

நீங்கள் இன்று அமைதியாக இருக்க வேண்டும். அதனால் உங்கள் ஆரோக்கியம் பராமரிக்கப்படும்.




இன்று மந்தமான நடவடிக்கைகள் காணப்படும். உணர்ச்சி வசப்படாமல் இருக்க உங்கள் உணர்ச்சிகளை கட்டுப் பாட்டில் வைக்க வேண்டும். அமைதியாக இருக்க வேண்டும்.

உங்கள் செயல்களை திறம்பட ஆற்ற இயலாது. சக பணியாளர்கள் ஒத்துழைக்க மாட்டார்கள். உங்கள் மேலதிகாரிகளின் அங்கீகாரம் பெற இயலாது.

இன்று உங்கள் அன்பை உங்கள் துணையிடம் வெளிப் படுத்த இயலாது. உங்கள் மனதில் குழப்பம் காணப்படும். அது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

பண வரவு திருப்திகரமாக இருக்காது. பணவரவு காணப்பட்டாலும் தேவையற்ற விஷயங்களுக்காக பண விரயம் ஏற்படுவதைக் காண்பீர்கள்.

உங்கள் ஆரோக்கியம் திருப்திகரமாக இருக்காது. தோல் எரிச்சல் போன்ற பாதிப்புகள் ஏற்படும்.

OUR HISTORICAL ACHIEVEMENTS IN JAFFNA
- FACULTY OF BIO SYSTEM TECHNOLOGY UNI. OF JAFFNA - KILINOCHCHI
- CLINICAL TRAINING AND RESEARCH CENTRE FACULTY OF MEDICINE - JAFFNA
- FACULTY OF ENGINEERING UNIVERSITY OF JAFFNA
- COURT COMPLEX AT CHAVAKACHCHERI
- FACULTY OF AGRICULTURAL UNIVERSITY OF JAFFNA
- RDD OFFICE - JAFFNA
- WATER BOARD BUILDING - JAFFNA

Blue Ocean GROUP OF COMPANIES
20+ LOCATED CITIES | 235+ CONDO PROJECTS | 3500+ CONDO UNITS
KELSEY HOMES 40 Years Housing Excellence


S.Thumilan
Group Chairman
ACA, ACMA (UK), ACCA, CGMA, MCSI (UK), CPA (AUS), FMAAT (SL), ACS



CENTRALPAR JA-ELA
CENTRAL PARK
15 ACRES LARGEST GATED HOUSING DEVELOPMENT IN JA-ELA

HEAD OFFICE
No. 9A, De Fonseka Place, Bambalapitiya, Colombo 04.
Tel : +94 112 582 582 | Hotline : +94 777 546 546

JAFFNA OFFICE
No. 21/1, Kerathivu Road, Navatkuli, Jaffna.
Mobile : +94 76 690 9949 | Mobile : +94 771 546 539

Northern PC Park



வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park




# பெங்களூரில் மழை சறுக்கியது நியூஸிலாந்து

## அரையிறுதியை உறுதிசெய்தது தென்னாபிரிக்கா

உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் நேற்று பெங்களூரில் நடைபெற்ற ஆட்டத்தில் நியூஸிலாந்து – பாகிஸ்தான் அணிகள் ஓட்டங்களைக் குவிக்க, இடைநடுவே மழை குறுக்கிட வெற்றிக் கனி பாகிஸ்தான் வசம் சென்றது.

13ஆவது உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் இந்தியாவில் நடைபெற்று வருகிறது.

இதில் நேற்று நடைபெற்ற முக்கிய ஆட்டத்தில் பாகிஸ்தான் – நியூஸிலாந்து அணிகள் மோதின.

இந்த ஆட்டத்தில் நியூஸிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. அரையிறுதிக்கு முன்னேற இந்த ஆட்டத்தில் கட்டாயம் வெற்றிபெற வேண்டும் என்ற நெருக்கடியில் இரு அணிகளும் மோதின. இதனால் ஆட்டத்தில் விறுவிறுப்புக்கு பஞ்சம் இல்லாமல் இருந்தது.

நியூஸிலாந்து வீரர்கள் பாகிஸ்தான் பந்து வீச்சை சிதறடித்தனர். ஆரம்பத்தில் இருந்தே அதிரடியாக விளையாடிய நியூஸிலாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 401 ஓட்டங்களைச் சேர்த்தது.

அந்த அணி சார்பாக துடுப்பாட்டத்தில் ஆகக்கூடுதலாக ரசின் ரவிந்திரா 108 ஓட்டங்களையும், கனே வில்லியம்சன் 95 ஓட்டங்களையும் சேர்த்திருந்தனர்.

பின்னர் 402 ஓட்டங்கள் என்ற இமாலய இலக்கு நோக்கிக் களமிறங்கிய பாகிஸ்தான் அணியும் வானவேடிக்கை காட்டியது.



பாகிஸ்தான் அணியின் ஆரம்ப வீரரான அப்துல்லா ஷாபிக் 4 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். மற்றொரு ஆரம்ப வீரரான பகர் சமன் 126 ஓட்டங்களைக் குவித்தார். இவருடன் ஜோடி சேர்ந்து ஆடிய அணித்தலைவர் பாபர் அசாம் 66 ஓட்டங்களைச் சேர்த்திருந்தார்.


பாகிஸ்தான் அணி 25.3 ஓவர்களில் ஒரு விக்கெட் இழப்புக்கு 200 ஓட்டங்களைச் சேர்த்திந்தபோது மழை குறுக்கிட்டது. இதனால் ஆட்டம் பாதியில் நிறுத்தப்பட்டது.

தொடர்ந்து மழைபெய்ததால் டி.எல்.எஸ். விதிப்படி 21 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பாகிஸ்தான் வெற்றி பெற்றதாக நடுவர்கள் அறிவித்தனர்.

ஆட்டநாயகனாக பாகிஸ்தானின் சமன் தெரிவானார்.

இந்த வெற்றியின் மூலம் பாகிஸ்தான் அணி, அரையிறுதிக்கு நுழைவதற்கான வாய்ப்பினைத் தக்கவைத்துக்கொண்டது. அதேவேளை, நியூஸிலாந்து அணியும் அதற்கான வாய்ப்பில் நீடிக்கின்றது.

இது இவ்வாறிருக்க, இன்றைய ஆட்டத்தில் நியூஸிலாந்து தோற்றதையடுத்து, தென்னாபிரிக்கா அணி அரையிறுதியை உறுதிசெய்தது. ஏற்கனவே இந்திய அணி அரையிறுதிக்குள் நுழைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




# நடையைக் கட்டியது நடப்புச் சம்பியன்!

இங்கிலாந்துக்கு எதிராக நேற்று நடைபெற்ற லீக் ஆட்டமொன்றில் அவுஸ்திரேலிய அணி வெற்றிபெற்றது. இந்த ஆட்டத்தில் தோற்றதன்மூலம் நடப்புச் சம்பியனான இங்கிலாந்து தொடரை விட்டு வெளியேறியது.

உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் நேற்று நடைபெற்ற இரண்டாவது லீக் ஆட்டத்தில் அவுஸ்திரேலியா – இங்கிலாந்து அணிகள் மோதின.

இந்த ஆட்டத்தில் முதலில் அவுஸ்திரேலிய அணி துடுப்பெடுத்தாடியது.

அந்த அணியின் தொடக்க வீரர்களாகக் களமிறங்கிய டேவிட் வோர்னர் (15) மற்றும் டிராவிஸ் ஹெட் (11) இருவரும் விரைவாக ஆட்டமிழந்து வெளியேறினார்.

பின்னர் களமிறங்கிய ஸ்மித் அரைச் சதத்தைத் (44) தவறவிட்டு ஆட்டமிழந்தார். அவரைத் தொடர்ந்து அரைச் சதம் கடந்த நிலையில் மார்னஸ் லாபுசேன் (71) ஆட்டமிழந்தார்.

பின்னர் வந்தவர்களுள் கூடுதலாக கமரூன் கிரீன் 47 ஓட்டங்களைச் சேர்த்துச் சென்றார்.

இறுதியில் அவுஸ்திரேலியா 49.3 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 286 ஓட்டங்களைச் சேர்த்தது.

பின்னர் 287 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கு நோக்கிக் களமிறங்கிய இங்கிலாந்து அணியின் விக்கெட்டுகள் ஒவ்வொன்றாகச் சரியத் தொடங்கின. இதனால், பெரும் நெருக்கடிக்கு மத்தியில் வெற்றியிலக்கு நோக்கி நகர்ந்தது.

எனினும், 48.1 ஓவர்களில் 253 ஓட்டங்களைச் சேர்த்த நிலையில் சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

இதனால், அவுஸ்திரேலிய அணி, 33 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

இங்கிலாந்து அணி சார்பாக துடுப்பாட்டத்தில், டேவிட் மிலன் (50), பென் ஸ்ரோக் (64), மொய்ன் அலி (42), கிறிஸ் வோகஸ் (32), டேவிட் வில்லி (15), அடில் ரிஷிட் (20) ஆகியோர் சிறப்பாக ஆடியிருந்தனர்.

அவுஸ்திரேலிய அணி சார்பாக பந்து வீச்சில், அடம் சம்பா 3 விக்கெட்டுகளையும், மிச்சல் ஸ்ராக், ஜோஸ், கம்மிங்ஸ், ஆகியோர் தலா இரு விக்கெட்டுகளையும் சாய்க்க எஞ்சிய ஒரு விக்கெட்டை மார்கஸ் சாய்த்தார்.

இந்த ஆட்டத்தின் நாயகனாக அவுஸ்திரேலியாவின் அடம் சம்பா தெரிவானார்.

இந்த ஆட்டத்தில் வெற்றிபெற்ற தன் மூலம் அவுஸ்திரேலிய அணி, புள்ளிப்பட்டிலில் மூன்றாவது இடத்துக்கு முன்னேறியது. ஆரம்பத்தில் இந்த அணி புள்ளிப்பட்டியலில் கடைசி இடத்தில் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் இந்தியா – தென்னாபிரிக்க அணிகள் மோதவுள்ளன.




**உலகக் கிண்ணக் கிரிக்கெட் 2023 - புள்ளி அட்டவணை**

| நிலை | அணிகள் | போ | வெ | தோ | சமன் | மு.அ. | பு | ஓ.ச. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | இந்தியா | 7 | 7 | 0 | 0 | 0 | 14 | 2.102 |
| 02 | தென்னாபிரிக்கா | 7 | 6 | 1 | 0 | 0 | 12 | 2.290 |
| 03 | அவுஸ்திரேலியா | 7 | 5 | 2 | 0 | 0 | 10 | 0.924 |
| 04 | நியூஸிலாந்து | 8 | 4 | 4 | 0 | 0 | 8 | 0.398 |
| 05 | பாகிஸ்தான் | 8 | 4 | 4 | 0 | 0 | 8 | -0.036 |
| 06 | ஆப்கானிஸ்தான் | 7 | 4 | 3 | 0 | 0 | 8 | -0.330 |
| 07 | இலங்கை | 7 | 2 | 5 | 0 | 0 | 4 | -1.162 |
| 08 | நெதர்லாந்து | 7 | 2 | 5 | 0 | 0 | 4 | -1.398 |
| 09 | பங்களாதேஷ் | 7 | 1 | 6 | 0 | 0 | 2 | -1.446 |
| 10 | இங்கிலாந்து | 7 | 1 | 6 | 0 | 0 | 2 | -1.504 |